தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor | Multidisciplinary
Article DOI: https://doi.org/10.63300/tm07042026.27

# Thandalaiyar Sndhagathil Ara Sindhanaigal

**G. Sakthi[1*], Dr. KT. Murugesan[2],**
[1]Research Scholar, Department of Tamil, Ganesar College of Arts and Sience,
(Affiliated to Bharathidasan University) , Melaisivapuri- 622403.
[2]Assistant Professor and Research advisor, Department of Tamil, Ganesar College of Arts and Sience,
(Affiliated to Bharathidasan University) , Melaisivapuri- 622403
Email: murugesankt04@gmail.com Tel: 8438460253
*Correspondence: sakthikavini@gmail.com.

**Article Info**
Received on 24-April-2026, Revised on 26-April-2026, Accepted on 26-April-2026, Published on 01-May-2026

## ABSTRACT

Virtue means the set of good deeds. The poets who created Tamil literature recorded their ideals in literature and guided the people to live a good life. In this way, Thandaliyar Satakam, which is known as a proverbial interpretation, has recorded moral thoughts suitable for all ages in literature. It has planted moral principles in people's minds by setting up various stories at appropriate places showing the morals people should follow and the bad morals they should avoid in the society. The author Padikasup Pulavar has recorded in literature the mentality of the people who lived in the society during his lifetime keeping in mind the morals of life they followed. The moral thoughts given by the literature are arranged in such a way as to help the human mind to improve.

***KEYWORDS:*** *Sadhagam, Aram, Paatiyal, Nooi, Neakkam, Ozhukkam.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).
Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 05 (May-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07052026*

# தண்டலையார் சதகத்தில் அறச் சிந்தனைகள்

[1]**க.சக்தி,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, கணேசர் கலை அறிவியல் கல்லூரி, (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது) மேலைச்சிவபுரி - 622403

[2]**முனைவர் கதி.முருகேசன்,** உதவிப் பேராசிரியர் மற்றும் ஆய்வு நெறியாளர், கணேசர் கலை அறிவியல் கல்லூரி, (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது), மேலைச்சிவபுரி - 622403,

**ஆய்வுச் சுருக்கம்**

அறம் என்றால் நல்ல செயல்களின் தொகுதி என்பது பொருள். தமிழ் இலக்கியம் படைத்த புலவர்கள் தங்களின் அறக்கோட்பாடுகளை இலக்கியங்களில் பதிவு செய்து மக்கள் நல்வாழ்க்கை வாழ வழிகாட்டியுள்ளனர். அவ்வகையில் பழமொழி விளக்கம் என்று அழைக்கப்படும் தண்டலையார் சதகம் எக்காலத்திற்கும் ஏற்ற அறச் சிந்தனைகளை இலக்கியத்தில் பதிவு செய்துள்ளது. சமூகத்தில் மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள் விலக்க வேண்டிய தீய ஒழுக்கங்கள் ஆகியவற்றை இனம் காட்டிப் பொருத்தமான இடங்களில் பல்வேறு கதைகளை அமைத்து மக்கள் மனதில் அறக் கோட்பாடுகளை விதைத்துள்ளது. நூலாசிரியர் படிக்காசுப் புலவர் தான் வாழ்ந்த காலத்தில் சமூகத்தில் வாழ்ந்த மக்களின் மனநிலையை அவர்கள் கடைப்பிடித்த வாழ்வியல் ஒழுக்கங்களை மனத்தில் கொண்டு இலக்கியத்தில் பதிவு செய்துள்ளார். இலக்கியம் கூறும் அறச் சிந்தனைகள் மனிதனின் மனம் சீர்பட உதவும் வண்ணம் அமைந்துள்ளன.

**குறிப்புச் சொற்கள்**

சதகம், அறம், சதம், பாட்டியல், நோய் நீக்கம், ஒழுக்கம்.

**முன்னுரை**

தமிழ் இலக்கிய வரலாற்றில் நாயக்கர் காலம் சிற்றிலக்கியக் காலம் என்று அழைக்கப்படுகிறது. இக்காலத்தில் தோன்றிய இலக்கிய வகைகளைத் தொண்ணூற்று ஆறு என்று முறைப்படுத்துதல் மரபு. தமிழில் பிற இலக்கியக் காலங்கள்போல் அல்லாமல் பேச்சுத் தமிழில் இலக்கியங்கள் படைக்கப்பட்ட காலம் இக்காலம். பல்வேறு பொருண்மைகளில் படைக்கப்பட்ட இலக்கியங்கள் பல்வகையில் இலக்கியச் சுவையை வழங்குவதாக அமைந்திருக்கின்றன. சிற்றிலக்கிய வகைகளும் ஒன்றான சதகம் எவ்வகைப் பொருளிலும் ந◌ூறு பாடல்கள் அமையப் பாடப்படுவதாகும். படிக்காசுப் புலவர் படைத்த தண்டலையார் சதகம் பழமொழி விளக்கம் என்னும் சிறப்பு பெயர் பெற்று விளங்குகிறது. நூலாசிரியர் பல்வேறு பழமொழிகளை எடுத்துக்கொண்டு அவற்றை அறவியல் நோக்கில் பாடல்களில் விளக்கியுள்ளார். நூல் கூறும் அறச் சிந்தனைகள் மக்கள் ஏற்று கடைபிடிக்கும் வண்ணம் அமைந்திருப்பதால் வாழ்வையும் மனத்தையும் செம்மைப்படுத்திக் கொள்ளச் சிறந்த கருவியாக விளங்குகிறது. அவ்வகையில் இக்கட்டுரை தண்டலையார் சதகத்தில்

, | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

அமைந்திருக்கும் அறச் சிந்தனைகளை ஆராய்கிறது.

**சதகம் - இலக்கணம்**

"சதம் என்னும் வடசொல் நூறு என்னும் பொருளைத் தரும். நூறு பாடல்களால் பாடப்பெறும் இலக்கிய வகை இஃதாதலின் பாடப்பெறும் பாடல் எண்ணிக்கையிலேயே நூல் பெயர் வழங்கும் பழக்கம் பற்றி இதனைச் சதகம் என வழங்கினர். எனவே நூல் பாடப்பெறும் பாடல் எண்ணிக்கையால் நூல் பெயர் பெறும் இலக்கிய வகைகளில் இஃதும் ஒன்றென அறிக" (இரா.கண்ணன், சிற்றிலக்கிய ஆராய்ச்சி, முதல் தொகுதி, ப.345) "விழையும் ஒரு பொருள் மேல் ஒரு நூறு / தழைய உரைத்தல் சதகம் என்ப" (இலக்கண விளக்கம், 84) என்று இலக்கண விளக்கம் இலக்கியத்திற்கான இலக்கணத்தைத் . முத்து வீரியம் சுவாமிநாதம் முதல◌ான பாட்டியல் நூல்கள் சதகத்தின் இலக்கணத்தை விரிவாக பேசியுள்ளன. இவ்விலக்கியத்தைத் தண்டியலங்காரம் கூறும் தொகைநிலை என்னும் வகையில் அடக்கலாம். தொகைநிலை என்றால் எண்ணிக்கை அடிப்படையில் பாடல்களை அமைப்பதாகும். சதக இலக்கிய வகையில் ஆறைக்கிழார் பாடிய கார்மண்டல சதகம் முதலாவதாகும்.

**தண்டலையார் சதகம்**

சதக இலக்கியங்களில் பழமொழி விளக்கம் என்னும் பெயர் பெற்றது. தண்டலையார் சதகம். "தண்டலைச்சேரியில் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானின் பெயர் நீள்நெறிநாதர். அம்பிகையின் பெயர் ஞானாம்பிகை, சோழ நாட்டில் அமைந்துள்ள இத்தலம் திருத்துறைப்பூண்டி புகைவண்டி நிலையத்தில் இருந்து இரண்டரைக் கல் தொலைவில் உள்ளது" (கதிர் முருகு, தண்டலையார் சதகம் மூலமும் உரையும், ப.1) என்னும் கதிர் முருகு கருத்து இலக்கியத்தின் பாட்டுடைத் தலைவன் சிவன் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. பாடல்களில் தண்டலை நகரைச் சிறப்பிக்கும் வகையில் படிக்காசுப் புலவர் தொடர்களை ஆண்டுள்ளார். இதனை, "திருவிருந்த தண்டலையார் நாட்டில் " (1 : 1) " அள்ளித் தெண் ணீறணியும் தண்டலையார் நாட்டில்" (18:1) "பண்ணுவவு மொழி பாகர் தண்டலையார் நாட்டில் " ( 19:3) முதலான சான்றுகளால் அறியலாம். "நூலின◌ தொடக்கத்தில் விநாயகரை வணங்கும் காப்புச் செய்யுள்கள் இரண்டும் அவையடக்கப் பாடல் ஒன்றும் அமைந்திருக்கின்றன. நூலில் நூறு பாடல்களும் பிற் சேர்க்கையாக ஒன்பது பாடல்களும் அமைந்திருக்கின்றன" (கதிர்முருகு பதிப்பு, தண்டலையார் சதகம்,, சென்னை: சாதா பதிப்பகம், 2009).

**கற்பு**

பெண்ணின் பெருந்தக்க குணங்களுள் ஒன்றாகக் கற்பு கருதப்படுகிறது. தொல்காப்பியர் கற்பைக் கரணமொடு புணரல் என்று குறிப்பிடுவர். "கற்பு எனப்படுவது கரணமொடு புணர / கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியை /கொடைக்கு உரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே' (தொ.கற்.1)

,| Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

"பெண்ணின் கற்பைக் காத்தலே சிறந்த காப்பு என்கிறார் வள்ளுவர்" (குறள்.57) ஒருவனுக்கு ஒருத்தி என்னும் கருத்தாக்க அடிப்படையில் தோன்றியது கற்புக் கோட்பாடு. அதனால்தான் பாரதி ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவில் இருக்க வேண்டிய பண்பு என வலிபபுறுத்தினார். "கற்பு நிலை என்று சொல்ல வந்தார் இரு / கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்' (பெண்கள் விடுதலைக்கும்மி.5) தண்டலையார் சதகம் பெண்களின் கற்புக் குணத்தை நுட்பமான நிலையில் பதிவு செய்திருக்கிறது. கற்பில் சிறந்த பெண்களான சீதை தமயந்தி நளாயினி வாசுகி என்னும் பாத்திரங்களை எடுத்துக்காட்டி ஆசிரியர் கற்பின் சிறப்பை விளக்குவது கருதத்தக்கது. அனுமன் பல இடங்களிலும் தேடிக் கடைசியாக இலங்கை சென்று சீதையைச் சந்தித்த பின்பு ராவணன் தனக்கு இழைத்த அநீதிக்காக இலங்கையை எரிக்கிறான். அப்போது சீதை தன்னுடைய கற்பின் வலிமையால் நெருப்பு கடவுளை வேண்டித் தீயை அணைக்கிறாள். நளன் தமயந்தியைக் காட்டில் தனியே விடுத்துச் சென்றான் அப்போது தமயந்தியை கண்ட வேடன் ஒருவன் அவளது கற்புக்குக் களங்கம் விளைவிக்க முயன்றபோது தன்னுடைய தூய்மையான கற்புப் பண்பால் அவனைத் தன் கண் பார்வையால் எரித்துச் சாம்பலாக்குகிறாள். அனுசுயையின் கற்பைச் சோதிக்க சிவன் திருமால் பிரம்மன் மூவரும் துறவிகள் வேடம் பூண்டு ஆடை இல்லாமல் தங்களுக்கு உபசரிக்க வேண்டும் என்று கூற அவள் தனது கற்புத் திறந்தால் மூவரையும் குழந்தைகளாக்கித் தொட்டிலில் இட்டுப் பாலூட்டினாள் என்றவாறாகப் புராணப் பாத்திரங்களின் வழி இலக்கியம் கற்பைச் சிறப்பித்துள்ளது. எனவே பெண்களுக்கு சிறப்பு தருவது கற்பு என்பது இலக்கியம் உணர்த்த வந்த நுட்பமான கருத்த◌ாகும். இதனை , " முக்கணர்தன் மலைநாட்டிற் கற்புடையமங்கையர் மகிமை மொழியப் போமோ/ ஒக்கும் எரி குளிர வைத்தாள் ஒருத்தி வில்வே டனை யெரித்தாள் ஒருத்தி மூவர் பக்கம் உற அமுதளித்தாள் ஒருத்தி எழு / பரிதடுத்தாள் ஒருத்தி பண்டு / கொக்கெனவே நினைத்தனையோ கொங்கணவா என்றொருத்தி கூறினானே"" (தண்டலையார் சதகம், 6) என்னும் பாடலால் அறியலாம்.

**விதிக் கோட்பாடு**

"முன்னரே தீர்மானிக்கப்பட்ட நியதி. பிரபஞ்ச விதிகள், அவற்றின் உறுப்புகளான இயற்கை விதிகள், அவற்றில் சிக்கியிருக்கும் மானுட வாழ்க்கையின் கோடானுகோடி நிகழ்ச்சிகள், அந்நிகழ்ச்சிகளின் இணைவுகள் பிரிவுகள் மூலம் உருவாகும் சமநிலைக்கோடே விதி, (www. தமிழ் விக்சனரி) என்று விதிக்கு விளக்கம் தருகிறது. "தொல்காப்பியர் விதியை பால் இன்னும் சொல்லால் குறிப்பிடுகிறார் " (தொல்.பொருள். கள. 90 ) மனித வாழ்வில் விதிக் கோட்பாடு குறிக்கத்தக்க ஒன்றாகும். பிறவிக் கோட்பாடும் விதிக் கோட்பாடும் பண்டைய இலக்கியங்களில் பேசப்பட்டுள்ளன. ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுடைய வாழ்க்கையின் அமைப்புக்கு ஏற்பவும் முன் வினைக்கு ஏற்பவும் செயல்பாடுகள் அமையும் என்பது இலக்கியங்கள் கூறும் விதி பற்றிய

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 05 (May-2026)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm07052026*

நம்பிக்கையின் அடிப்படையாகும். மனித வாழ்க்கையில் செயல்களில் விதியின் தாக்கம் பல்வேறு இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்ட அடிப்படையில் தண்டலையார் சதகம் விதிக் கோட்பாட்டை முன் வைத்துள்ளது. மனித வாழ்க்கை இறைவனால் கொடுக்கப்பட்டது. அவன் எண்ணப்படியே வாழ்வில் செயல்கள் நடைபெறும் என்றும் மனித முயற்சியால் ஆவது ஒன்றும் இல்லை என்று குறிப்பிடுகிறது. இக்கருத்தை விளக்க இலக்கியம் " ஐங்காதம் போனாலும் தன் பாவம் தன்னோடு " (தண்டலையார் சதகம், 3) என்னும் பழமொழியை எடுத்தாள்கிறது. இறைவன் விதித்தபடி அனைத்தும் நடைபெறும் என்பதால் மிகுதியாக ஆசை கொள்வதாலும் அலைந்து திரிவதாலும் பயனில்லை என்று குறிப்பிடுகிறது. பூவுலகில் வாழ்கின்ற காலத்தில் பிறருடைய பொருளுக்கு ஆசை கொள்ளல் தம் வலிமையினால் பிறருக்குத் தீங்கு நினைத்தல் பிறருக்குச் சிறிதளவும் நன்மை செய்யாதிருத்தல் என்னும் குணங்களைக் கொண்ட அனைவரும் வாழ்நாளின் இறுதியில் துன்பமடைவர். மனித வாழ்க்கையில் நடக்க வேண்டியன நடக்கும் என்பதால் வாழ்கின்ற வாழ்க்கையை இறைவனை நினைத்து அமைதியாக வாழ்வது நலம் தரும் என்று குறிப்பிடுகிறது. இதனை, "எண்ணமெல்லாம் பொய் எழுத்தின்படி மெய் " (மேலது. 19) என்னும் பழமொழியால் குறிப்பிடுகிறது. இதன் விளக்கமாக, "மண்ணுலகா ளவும் நினைப்பர் பிறர்பொருள் மேல் ஆசை வைப்பர் வலிமை செய்வார் / புண்ணியம் என் பதைச் செய்யார் கடைமுறையில் அலக்கழித்து புரண்டே போவார் / பண்ணுலவு மொழி பாகர் தண்டலையார் வகுத்த விதிப்படியல் லாமல் / எண்ணமெல்லாம் பொய்யாகும் மௌனமே மெய்யாகும் இயற்கை தானே" (மேலது.20) என்னும் பாடல் அமைந்திருக்கிறது.

**நன்றியுணர்வு**

மனிதப் பண்புகளில் உயர்ந்ததாக நன்றி உணர்வு கருதப்படுகிறது. ஒருவர் தனக்குச் சரியான காலத்தில் செய்த உதவியை மறக்காதிருத்தல் உயரிய பண்பாகவும் மறத்தல் தீய பண்பாகவும் கருதப்படுகிறது. " சரியான காலத்தில் செய்த உதவி உலகைவிடப் பெரியதாகும் " (குறள். நன்றி. 2) என்று திருக்குறள் குறிப்பிடுகிறது. "எத்தகைய பாவம் செய்தவர்களும் அதில் இருந்து மீண்டுவர வழியுண்டு ஆனால் நன்றி மறந்தவர்கள் மீண்டு வர வழி இல்லை என்று கலித்தொகை குறிப்பிடுகிறது" (கலி.34: 1-5) "உப்பிட்டவரை உள்ளளவும் நினை" ( தண்டலையார் சதகம், 12) என்னும் பழமொழியை எடுத்துக்கொண்ட இலக்கியம் அதற்கு விளக்கமாக, "துப்பிட்ட ஆலம்விதை சிறிது எனினும் பெரியதாகும் தோற்றம் போலச் / செப்பிட்ட தினைஅளவு செய்தநன்றி பனைஅளவாய்ச் சிறந்து தோன்றும் / கொப்பிட்ட உமைபாகர் தண்டலையார் வளநாட்டில் கொஞ்ச மேனும் / உப்பிட்ட பேர்கள்தமை உளவரையும் நினைக்கும் இந்த உலகம் தானே " (மேலது) என்னும் பாடலை எடுத்தாண்டுள்ளது. இப்பாடலில் பறவைகள் தின்று துப்பிய சிறிய ஆலம்பழ விதை பெரிய மரமாக வளர்ந்து காட்சி தருவதைப் போலத் தினை அளவாகச் செய்யப்பட்ட நன்றி

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

காலத்தால் பெரியதாக வளர்ந்து நிற்கும் அவ்வாறே சிறிதளவு உப்பு இட்டவரையும் உயிருள்ளவரை மறவாத இருக்க வேண்டும் என்று மக்களுக்கு நல்ல பண்பை ஆழமான நோக்கில் விதைக்கிறது.

**கொடைப்பண்பு**

கொடைப்பண்பு உயரிய பண்பாகத் தமிழகத்தில் போற்றி வளர்க்கப்பட்ட பண்பாகும். பண்டைக்காலத்தில் மன்னர்களும் செல்வம் படைத்தவர்களும் ஏழைகளுக்கும் தன்னை நாடி வந்த பிறருக்கும் பொருள் கொடுத்து உதவுவதை நோக்கமாக கொண்டனர். கொடைப் பண்பின் உயர்வை விளக்கக் காப்பியங்கள் முதலான இலக்கியங்களில் பல்வேறு பாத்திரங்களும் படைக்கப்பட்டன. அவ்வகையில் கர்ணன் மகாபலிச் சக்கரவர்த்தி முதலியோரை எடுத்துக்காட்டாகக் கூறலாம். தண்டலையார் சதகம் பிறருக்குக் கொடுத்து உதவும் கொடைப்பண்பின் சிறப்பையும் கொடைப் பண்பு இல்லாமல் இருப்பதால் ஏற்படும் இழிவையும் பதிவு செய்துள்ளது. "ஓதரிய தண்டலையார் அடி பணிந்து நல்லவன் என் றுலகம் எல்லாம் / போதமிகும் பேருடனே புகழ்படைத்து வாழ்பவனே புருடன் அல்லால் / ஈதலுடன் இரக்க மின்றிப் பொன் காத்த பூதமென இருந்தால் என்ன / காதவழி பேரில்லான் கழுதையோ டொக்கும் எனக் காண லாமே" (மேலது. 25) என்னும் பாடலின் ஆண்மகன் கொடுக்கக் கூடிய வள்ளல் குணமும் இரக்கப் பண்பும் கொண்டிருக்க வேண்டும். பொன்னைக் காத்துக் கொண்டிருக்கும் பூதம்போல வாழ்வதால் எந்தப் பயனும் கிடையாது என்று பதிவு செய்துள்ளது. அவ்வாறே, "எட்டி பழுத்தால் என்? ஈயாதார் வாழ்ந்தால் என் " (மேலது. 24) என்னும் பழமொழியின் மூலம் காஞ்சிரை மரம் பழுத்தால் யாருக்கும் பயன்படுவது கிடையாது அவ்வாறே தன்னிடம் உள்ள பொருளைப் பிறருக்குப் பகிர்ந்து கொடுத்து வாழாதவன் வாழ்ந்தும் பயனற்றவனாவான் என்று குறிப்பிடுகிறது.

**தன் நிலை தாழாது நிற்றல்**

உலகில் வாழக்கூடிய மக்கள் ஒவ்வொருவருக்கும் கடமை இருக்கிறது. அவரவர்கள் தமக்கு விதிக்கப்பட்ட கடமையைச் சரிவரச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யவில்லையானால் அவர்களின் மதிப்புக் கெடுவதோடு பிறருக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். தண்டலையார் சதகம் எண்ணம் ஒன்றும் செயல் ஒன்றுமாக இருக்கக் கூடாது என்பதை, "காதிலே திருவேடம் கையிலே ஜெபமாலை கழுத்தின் மார்பின்/மீதிலே தாழ்வடங்கள் மனதிலே கரவடம் ஆம் வேடம் ஆமோ/ வாதிலே அயன் தேடும் தண்டளை நீள் நெறி யாரே மனிதர் காணும்/ போதிலே மௌனம் இராப்போதிலே ருத்திராக்கப் பூனை தானே" (தண்டலையார் சதகம்,29) என்னும் பாடலில் பதிவு செய்துள்ளது. பிரமனும் திருமாலும் தாங்களே உயர்ந்தவர்கள் என்று கருதித் தங்கள் கடமையை மறந்த காரணத்தால் அவர்களுக்குச் சிறுமை ஏற்பட்டதைப் பதிவு செய்திருக்கிறது. அவர்கள் தத்தம்

, | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

நிலையில் நில்லாமையே இழிவு ஏற்பட்டதற்கான காரணமாகும். கதிர்முருகு இத்தகு சூழலை, "தனக்குரிய கடமையைத் தான் சரியாகச் செய்ய வேண்டும் உள் ஒன்றும் புறம் ஒன்றும◌ாக இரண்டு சிந்தனைகளை கொண்டிருக்கக் கூடாது. படைப்புக் கடவுளான பிரமனுக்கும் காக்கும் கடவுளான திருமாலுக்கும் ஆணவ குணத்தால் யார் பெரியவர் என்னும் எண்ணம் ஏற்பட்டது. பிரம்மன் திருமாலின் வைகுண்டத்திற்குச் சென்று நானே உலகில் உள்ள அசையும் பொருட்கள் அசையாப் பொருட்கள் உயிர்கள் அனைத்தையும் படைத்தேன். நான் படைக்காவிட்டால் நீ எப்படிக் காக்க முடியும் என்று பேசல◌ானார். இதைக் கண்ட திருமால், சிவன் உன் தலைகளில் ஒன்றைக் கொய்தபோது உன்னால் மீண்டும் உருவாக்கிக் கொள்ள இயலவில்லை இதுதான் உன் சத்தியா என்றார். இருவரின் ஆணவத்தில் உலகம் சமநிலை இழந்தது. படைக்கும் தொழிலும் காக்கும் தொழிலும் தடைப்பட்டன. தேவர்கள் சிவனிடம் சென்று முறையிட்டார்கள். சிவன் இவர்களுக்கு உண்மையை உணர்த்த வேண்டி அவர்கள் முன்பு அடிமுடி காண◌ா அளவில் ஒளித் தம்பமாக வடிவெடுத்து நின்றார். அதைக் கண்டு திகைத்த இருவரும் தங்கள் மனதில் கொண்டிருந்த ஆணவத்தால் ஒளி வடிவில் எழுந்தருளி இருப்பது சிவன் என்பதை நினைக்க மறந்தனர். மீண்டும் ஆணவம் கொண்டு இந்த ஒளி மலையின் அடியையோ முடியையோ காண்பவர்களே வெற்றி பெற்றோர் ஆவர் என்று அன்னப் பறவை மற்றும் பன்றி வடிவம் எடுத்து முயன்றனர். ஆணவத்தின் காரணத்தால் அவர்களால் அடிமுடி காண இயலவில்லை. எனவே தேவர்கள் ஆனாலும் அதற்குரிய நிலையில் நின்றால் தான் மதிப்பு இல்லையேல் அவர்களுடைய நிலை மதிக்கத்தக்கதாக இராது" (கதிர் முருகு, தண்டலையார் சதகம் மூலமும் உரையும், பக். 33, 34) என்று புராண கதையை எடுத்துக்காட்டி பாடல் பொருளை விளக்குகிறார்.

**நல்லரசு**

நாட்டை ஆளுகின்ற மன்னன் மக்களுக்கு நல்ல அரசை வழங்க வேண்டும் அதுவே நியதி. மோசிகீரனார் நாட்டு மக்களுக்குத் தேவையானது நெல்லும் நீரும் அல்ல நல்ல அரசனே என்று குறிப்பிடுவார். இதனை, "நெல்லும் உயிர் அன்றே; நீரும் உயிர் அன்றே/ மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" (புறம்.186:1-2) என்னும் புறநானூற்றுப் பாடல் அடிகள் விளக்கும். நாட்டை ஆள்வதற்கு நல்லவர்கள் வரவேண்டும் என்னும் சிந்தனையை இலக்கியம் விதைக்கிறது. "குறுணி அளவு மையை எடுத்துத் தடவி வரையப்பட்ட கண் ஓவியம் என்றாலும் அது கண்ணாகிப் பார்வை தராது அவ்வாறே சிறுமைக் குணம் உடைய அறிவற்றவர்கள் அரசியலில் சேர்ந்து நாட்டைக் காக்க நினைத்தாலும் அறிவு நலம் உள்ளவர்களைப்போல அவர்களால் செயல்பட முடியாது என்று குறிப்பிடுகிறது" (ம◌ேலது. 59) நாடு நலம் பெற மன்னன் நல்லவனாக இருந்தால் மட்டும் போதாது

, | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 05 (May-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07052026*

அவனை சுற்றி இருக்கக்கூடிய அமைச்சர்களின் சுற்றமும் சிறந்ததாக இருக்க வேண்டும். அப்போதுதான் அவனால் நல்லாட்சியைத் தர முடியும் என்று குறிப்பிடுகிறது. "அறிவு நிரம்பிய அமைச்சர்கள் அவையில் இல்லை என்றால் அரசனுக்குச் சிறப்பு உண்டாகாது. அரசு நடவடிக்கைகளில் அமைச்சர்களைத் தவிர வேறு யாரும் அரசனுக்கு சிறந்த நெறிமுறைகளைக் கற்பிக்க முடியாது" (மேலது. 83) என்று அரசுக்கு நல்ல அமைச்சர்களின் தேவையை வலியுறுத்துகிறது "நாற்கவியும் புகழ வரும் தண்டலையார் வளநாட்டில் நல்ல நீதி/மார்க்கமுடன் நடந்து செங்கோல் வழுவாமல் புவியியாழும் வண்மை செய்த/ தீர்க்கமுள்ள அரசனையே தெய்வம் என்பார் கொடுங்கோன்மை செலுத்தி நின்ற/மூர்க்க முள்ள அரசனும் தன் மந்திரியும் ஆழ்நரகில் மூழ்குவாரே" (தண்டலையார் சதகம், 38) என்னும் பாடலில் மன்னனுடைய நடுநிலை தவறாத ஆட்சியில்தான் அவனுடைய சிறப்பு இருக்கிறது. கொடைப் பண்பும் துணிவும் உள்ள மன்னனையே மக்கள் கடவுள் என்று கூறுவார்கள். தவறான ஆட்சி நடத்துகின்ற மன்னனும் அவனுடைய பேச்சைக் கேட்கின்ற அமைச்சர்களும் நரக உலகில் அமிழ்ந்து போவார்கள் என்று இலக்கியம் குறிப்பிடுகிறது.

**அறம்**

அறம் என்றால் நல்ல செயல்களின் தொகுதி என்பது பொருள். திருவள்ளுவர் "மனத்துக்கண் மாசில னாதல் அறம்" (குறள். 34) என்று மனத்தூய்மையை வலியுறுத்துவார். தண்டலையார் சதகம் நல்ல மனத்துடன் அறச் செயல்கள் செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. "நேற்றுளார் இன்றிருக்கை நிச்சயமோ ஆதலினால் நினைத்தபோதே /ஊற்றுள்ள பொருளுதவி அறந் தேடி வைப்பதறிவுடைமை அன்றோ /கூற்றுள்ளம் மலையவரும் தண்டலயாரே சொன்னேன் குடபால் வீசும்/காற்றுள்ள போதெவரும் தூற்றிக்கொள்வது நல்ல கருமந் தானே" (தண்டலையார் சதகம், 42) மனிதர்கள் வாழ்கின்ற காலத்தில் அறச் செயல்களை மன விருப்பம் கொண்டு செய்ய வேண்டும். யாருக்கும் எந்த விதமான பயனும் இல்லாமல் வாழ்வதால் இறுதிகாலம் துன்பம் உடையதாக இருக்கும். எமன் உயிர் கவரும் காலத்தில் இரக்கம் இல்லாமல் உயிரைக் கவர்ந்து செல்வான். எனவே வாழ்கின்ற காலத்தில் பிறருக்கு நன்மை செய்யும் பயனுள்ள வாழ்க்கையாக வாழ வேண்டும் என்பதைப் படிக்கா சுப்புலவர், "பொலியவளம் பல தழைத்த தண்டலை நீள் நெறி பாதம் போற்றி நாளும் / வலியவலம் செய்தறியீர் மறம் செய்வீர் நமன் தூதர் வந்து கூடி / மெலியவரைத் திருபொழுது கலங்கண்ணீர் உகுத்தாலும் விடுவ துண்டோ / எலியழுது புலம்பிடினும் பூனை பிடித் தது விடுமோ என் செய் வீரே" (மேலது.46) என்னும் பாடல்களில் குறிப்பிடுகிறார். எனவே மனிதன் இறக்கும் முன்பு அறம் செய்ய வேண்டும் என்பது இலக்கியத்தில் நேரடியாக உணர்த்தப்படுகிறது. "சாங் காலத்தில் சங்கரா என்றால் முடியுமோ?" (மேலது. 51) என்னும் பழமொழியால் வாழும் காலத்திலேயே அறம் செய்ய வேண்டியதன் தேவையைப் பதிவு

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

செய்துள்ளார். பிறருக்கு அறம் செய்யும் பொருள் சிறிதாக இருந்தாலும் அது தம் பொருளாக இருக்க வேண்டும் பிறர் பொருளைக் கொண்டு அறம் செய்வது அறமாகாது என்னும் சிந்தனையைத் தண்டலையார் சதகம் நுட்பமாக விளக்குகிறது. இதனை விளக்க, "பசுவைக் கொன்று செருப்பைத் தானம் கொடுத்தல்" (மே◌லது.58) என்னும் பழமொழியை எடுத்தாளுகிறது. பிறருடைய பொருளைக் கவர்ந்து அதைத் தன் பொருள் என மனத்தில் எண்ணிக்கொண்டு திசைகள் புகழுமாறு தானம் செய்வது பழியைக் கொண்டு வந்து சேர்க்கும் மேலும் அது பசுவைக் கொன்று அதன் தோலால் செய்யப்பட்ட செருப்பை தானமாக கொடுப்பதற்கு சமமாகும் என்று கடிந்துரைக்கிறது.

**முடிவாக**

தண்டலையார் சதகம் பழமொழி விளக்கம் என்று அழைக்கப்படுகிறது. பண்டைக் காலத்தில் வழக்கத்தில் இருந்த பழமொழிகளை எடுத்துக்கொண்டு அவற்றை வாழ்வியல் நோக்கில் அறங்களாகப் பதிவு செய்துள்ளது. மனிதன் தனக்கும் பிறருக்கும் பயனுள்ள வாழ்க்கையை வாழ வேண்டும் அதுவே சிறந்ததாகும். வாழ்கின்ற காலத்தின் தன் வாழ்நாள் குறைவு என்பதை உணர்ந்து பிறருக்கு நன்மை செய்வதையும் இயன்ற அளவு நல்ல செயல்கள் செய்வதையும் பிறருக்கு எவ்வகையிலும் துன்பம் செய்யாமல் வாழ்வதையும் மனிதன் வாழ்நாள் நோக்கமாகக் கொண்டு வாழ வேண்டும் என்பதை அறக்கோட்பாடாகப் பதிவு செய்துள்ளது.

**பயன்பட்ட நூல்கள்**

[1.] கண்ணன் இரா, சிற்றிலக்கிய ஆராய்ச்சி (முதல் தொகுதி), சென்னை: அப்பர் பதிப்பகம், 2002
[2.] கதிர் முருகு, தண்டலையார் சதகம் மூலமும் உரையும், சென்னை: சாரதா பதிப்பகம்,2009
[3.] கோபாலையர் தி, இலக்கண விளக்கம், தஞ்சை: சரஸ்வதி மஹால், 1974
[4.] சுப்பிரமணியன் ச.வே (ப.ஆ) பிரபந்த தீபம், சென்னை: தமிழ்ப் பதிப்பகம், 1980
[5.] துரைசாமிப்பிள்ளை ஔவை, புறநானூறு, சென்னை: கழகம், 1973
[6.] நச்சினார்க்கினியர், கலித்தொகை மூலமும் உரையும், சென்னை: கழகம், 2007
[7.] பரிமேலழகர், திருக்குறள் உரை, சென்னை: சாரதா பதிப்பகம், 2007
[8.] www.தமிழ் விக்சனரி

tamilmanam